110

110

முதல் கதை

17 JUL 1944
MADRAS

3-44

ஆர். திருஞானசம்பந்தம்
[ஆசிரியர், "வசந்தம்"]

பவுன் - வெள்ளி - வைர
நகைகளுக்கு
S. சுப்புராஜ்
கடை வீதி
கோயமுத்தூர்.

for your requirements
Enquire
Electric Motors: Domestic Pumping sets. Rice Hullers. Flour Grinding Mills and all other Machineries.
Mill Stores.
TEL: "PUMPSETS".
Mani & Co.,
5/16 OLD POST OFFICE ROAD.
COIMBATORE.

சிந்தாமணி வெளியீடு—2

முதல் கதை

ஆர். திருஞானசம்பந்தம்.

894.8113

சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ்,
ராஜ வீதி, : : கோயமுத்தூர்.
1944

031,3

விலை அணு மூன்று

Printed at Gunavel Press, Edayar Street, Coimbatore
for Chintamani Publications, Coimbatore.

17 JUL 1944

பால்நிலவும் பரிமளமும்.

கோவில் மணி, 'கணீர், கணீர்' என்று ஒலித்தது. பக்கத்து மலையிலிருந்து வரும் மாடுகளின் கழுத்தில் கட்டியிருக்கும் சிறு சிறு மணிகளின் நாதமும், கோவில் மணியின் நாதத்துடன் இரண்டறக் கலந்து, 'கண கண' வெனும் இன்ப ஓசையை உண்டாக்கியது. அந்த மணிகளின் நாதம் மறையு முன்பே, இளம் பெண்களின் 'கல கல' வெனும் இளநகை, அதனுடன் கலந்து கொண்டு, கலைஞனின் கனவு போன்ற ஒரு இன்ப மயக்கத்தை ரசிக உள்ளங்களிலே பரிபூரணமாக நிறைத்தது.

அன்றுதான் பூரணச் சந்திரன், தன்னுடைய எழில் பொங்கும் அமுத கிரணங்களை எங்கள் கிராமத்தில் அமோகமாகப் பொழிந்து கொண்டிருந்தான். இதற்குமுன் இந்த மாதிரி சந்திரோதயத்தை, நான் கண்டு களித்ததே இல்லை. ஆகா! துல்லியமான வெண் கதிர்கள். பூங்கிரணங்கள் மரங்களின் உச்சியை முத்தமிட்டுக் கோலாகலமாகக் கொஞ்சி விளையாடிய விந்தை, எந்தக் கதாசிரியரின் கற்பனைக்குத்தான் அடங்கும்? எழுத்திலே அந்த அழியாத வடிவை எப்படிச் சித்திரிப்பது? இளந்தளிர்கள், நாணம் கொண்ட புதுப் பெண்ணைப் போல் 'படபட'க்கும் பரவசத்தை. எப்படி வர்ணிப்பதென்று எனக்குத் தெரியவில்லை!

மலையின் திட்டுத் திடர்களிலே அமுதவெள்ளம், அருவியின் வெள்ளத்தோடு போட்டி போட்டுக்கொண்டு பாயும் அற்புத விந்தையைக் கண் கொண்டமட்டும் பருக வேண்டியதுதான். முன் இரவிலே இந்தமாதிரி தேஜோமயமாக உள்ளங்களைக் கொள்ளை

கொள்ளும் சந்திரன், இன்னும் கொஞ்ச நேரத்தில் எப்படி உல்லாச வெள்ளத்தில் ஆழ்த்தப் போகிறான் என்பதை எண்ணவும் என்னை அறியாமல் இன்ப கீதம் இசைக்க என் மனம் துடித்தது. மகுடியின் மயக்கிலே கூத்தாடும் அரவத்தைப் போல், மனக் கடலிலே எண்ணமாகிய அலைகள் புரண்டு விளையாடின. அந்தச் சுற்றுப் புறச் சுகச் சூழ்வுக்குத் தகுந்த விதம், தக்க நண்பர்களும் பக்கத்திலே அமர்ந்திருந்தார்கள். அழகின் கதிர்கள் தீண்டியதும் ஆனந்த பரவசத்தைக் குழைத்துக் கலந்து, நண்பர் சீதாராமன் பாடத் தொடங்கிவிட்டார். அடடா! பாட்டு என்றால் அதுதான் பாட்டு!

என்னவோ, கற்பனையும் காரணமும் என்று சொல்கிறோம். லட்சியமும், உயர் நோக்கமும், என்றெல்லாம் சொல்கிறோமே, இவைகள் ஒன்றையும் படாடோபப் படுத்தாமல் சீவன் நிறைந்த அற்புதக் கிராமப் பாட்டுகளைச் சித்திரித்த கலை உள்ளங் களை என்னவென்று சொல்வது?

அன்னையின் மார்போடு மார்பாக அணைத்துக்கொள்ள விரும்பும் தாலாட்டு, காதற் தீ நெஞ்சைத் தகிக்க, உணர்ச்சியைக் கிளறும் பாமரக் காதல் பாட்டுகள், சோகம் அவ்வளவையும் வடித் தெடுத்த ஒப்பாரி- இவைகளெல்லாம், ஆண்-பெண் அடங்க கிராம மக்களின் உண்மையான அனுபவ வெளியீடுகள் அல்லாமல் வேறு என்ன? ஆம், நண்பர் சீதாராமன் அப்பேர்ப்பட்ட கிராமியப் பாடல் ஒன்றைத்தான் தமது தேனினும் இனிய தீங்குரலிலே இசைத்துக் கொண்டிருந்தார். எங்கள் நெஞ்சம், எங்கெல்லாம் சிறகு பெற்றுப் பறந்து சென்றன என்பதை இப்போது கற்பனை கூடப்பண்ணிப் பார்க்க முடியவில்லை. பேச்சோடு பேச்சாக சீதாராமன் ''பால்நிலவும் பரிமளமும் ஞாபகத்துக்கு வருகிறது'' என்றார். உற்சாக மிகுதியிலே கூத்தாடிக் கொண்டிருந்த நண்பர்களுக்குச் சீதாராமன் சொன்னது கேட்டதோ இல்லையோ நான் அறியேன். ஆனால், என்னை மட்டும் யாரோ ஒரு குலுக்குக் குலுக்கியது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. என் இந்த மயக்கம்? உள்ளத்திலே பால்நிலாப் பொங்கிக் கொண்டிருப்பதனாலா? அல்லது பால்நிலவோடு பரிமளத்தையும் சேர்த்துச்சொன்னதாலா? வாஸ்தவத்தில் பரிமளம் யார்? அவளுக்கும் இந்த நிலவுக்கும் சம்பந்தமென்ன? இவைகள் ஒன்றும் எனக்குத் தெரியாது. பிறகு வற்புறுத்திக் கேட்க ஆரம்பித்ததின் பேரில் நண்பர் கதையை ஆரம்பித்தார்.

கட்டழகியின் கனவு.

"நம்மை அறியாமல் சிலசமயம் வாய் தவறி என்னத்தையாவது சொல்லி விடுகிறோம். பிறகு, அதையே சிந்தித்துப் பார்க்கும் போது, ஏன் சொன்னோம் எதற்காகச் சொன்னோம்? அப்படிச் சொல்லியது சரிதானா? என்றெல்லாம் சிந்தனைகள் உருள ஆரம் பித்து விடுகின்றன. என்ன, நான் சொல்வது விளங்காது. சில இடங்களில் நிச்சயமாக உங்களுக்கு விளங்கவே விளங்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அதை எல்லாம் தெளிவுபடுத்தி விடுகிறேன். என்ன கேட்கிறீர்களா?'' என்றார் சீதாராமன்.

நான் மலையைப் போல் மௌனமாக இருந்தேன். உலவும் நிலவைப்போல் மகிழ்ச்சி பொங்க நண்பர் சொல்லுகிறார்.

''இப்போது பரிமளத்தைப் பற்றி பேசுவேன் என்று நான் நினைக்கவே இல்லை. ஆனால் பரிமளத்தின் வாழ்க்கை ஏடுகளை மெதுவாக-அடுக்கடுக்காக-சிலந்திப்பூச்சி வலை பின்னுவது போன்று உங்கள் உள்ளத் திரையிலே பின்ன வேண்டி இருக்கிறது. ஒரு காலத்தில் இந்த வலை ஒரு மாயவலையாகவும் இருந்தது. அதாவது அப்படி இருக்கத் தகுதி வாய்ந்தது. ஆனால் இன்றோ? அந்த வலை உங்கள் உள்ளத்தைப் பின்னிப் பிணைக்கலாம். ஆனால் உங்களுக்கு அதனால் கொஞ்சமும் இடைஞ்சல் கிடையாது. என்ன! என்ன! 'இடைஞ்சல்' என்று சொன்னேன்? ஒருவேளை இந்தச் சோகக் கதையைக் கேட்டு, பரிமளத்தின் வாழ்க்கைப் படலங்கள் உங்களுக்குள்ளே பரிமளிக்கலாம். மற்றபடி, பரிமளம் என்றோ ஒரு காலத்தில் சாதாரண உள்ளங்களுக்குப் பரிமளித்ததுபோல் உங்களுக்கும் ஒரு இனிய நினைவுப் பெருக்காக வந்துதவலாம் அவ்வளவுதான்......''

“சொல்லப்பா சொல்லு” என்றேன்.

சீதாராமன் ஆரம்பத்தில் பாடிய கிராமியப் பாடலை நினைவு படுத்திக்கொள்ள முயல்கிறவர் போல் சற்று சிரித்தார். பிறகு, அருவி வேகத்தில் உணர்ச்சியுடன் பேச ஆரம்பித்தார்.

“பச்சைப் பசேலென்ற பசும் காட்சிகளைக் கண்டிருக்கிறீர்கள். அந்தப் பசும் காட்சிகளின் இடையே நவ நவமான மலர்களையும் பார்த்திருப்பீர்கள். அப்படிப் பார்த்த அழகிய காட்சிகளை இப்போது ஒரு முறை ஞாபகத்துக்குக் கொண்டு வாருங்கள். நீங்கள் ஒரு மாமரத்தின் நிழலிலோ, அல்லது புன்னையின் அடியிலோ, நிழலின் முழு ஆனந்தத்தையும் அனுபவித்துக் கொண்டு இருக்கும்போது ‘கலகல’ என்று சிரிப்புச் சத்தம் கேட்கிறதாக வைத்துக் கொள்ளுங்கள், ‘கல கல’ சத்தத்துடன் மெல்லிய வளைக்கரங்களின் ஒலியும் கலந்து கொள்கிறது. மீண்டும் அதே இளநகை ‘கலீர்’ என்று ஓடி வருகிறது. இருபது வருஷங்களுக்குமுன் அந்தமாதிரி ஒரு இன்ப இசை இந்தப் பக்கத்திலிருந்து வந்ததென்றால் அது பரிமளமாகத்தான் இருக்க வேண்டும் என்று எல்லோரும் ஏகமனதாகச் சொல்லி விடுவார்கள். ஆம், பரிமளத்தின் அழகு வடிவங்களிலே கண்ணுக்குத் தோன்றாத தோற்றங்களிலே அதுவும் ஒன்று.

பரிமளம் இயற்கையாக வளர்ந்த புது மலர் போன்றவள். கொஞ்சம் அதிகமாக வாஞ்சையைக் கலந்து சொல்லவேண்டுமென்றால், “மனிதர் காலடிபடும் இந்த மண்ணிலே பூக்காத புஷ்பம் அவள்” என்றுதான் சொல்ல வேண்டும். அவளை எந்தக் கவிஞனாவது வந்து காணக் கூடாதா? கண்டதும் எப்பேர்ப் பட்ட அற்புதக் கீதத்தை இசைப்பானோ என்று வெகுநாளாக என்னையே நான் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய விசித்திர ஆசைகள் தான் உனக்குத் தெரியுமே? விண்ணில் ஊஞ்சலாடும் அந்த வெண்ணிலா நம் கண்ணுக் கெதிரே கையால் தொடும் வண்ணம் வந்து நிற்காதா என்றெல்லாம் ஆசை கொள்ளும் என் சுபாவம் உனக்குத் தெரிந்ததுதானே? என்ன சொன்னேன்? யாராவது கவி ஒருவன் வந்து அந்தக் கட்டழகியைக் காண மாட்டானா, கண்டு களிப்புக் கடலிலே ஒரு கவி இயற்ற மாட்டானா என்றெல்லாம் என்னுள்ளம் ஏங்கிக் கிடந்தது. அந்த ஏக்கத்தைத் தீர்ப்பதற் கென்றே வந்தவன் போல் வாசலன் வந்து சேர்ந்தான்.

பாசமும் நேசமும்.

அப்போது நாற்று நடவுக் காலம். குனிந்த தலை நிமிராமல் வரிசையாக அழகிகள் நாற்றுகளை அள்ளி அள்ளி நட்டுக் கொண்டு போகிறார்கள். அவர்கள் மத்தியிலே 'ஆனந்தத் தென்றல்' போல் பரிமளம் காட்சி அளித்தாள். கவி அவளை அன்றுதான் முதல் முறையாகப் பார்க்கிறான். பார்த்தவுடன் தன் உணர்ச்சிகளை அப்படியே கவியில் படம் பிடித்து விட்டான். என்னைப் போன்ற ரசிகன் அவனுக்கு நண்பனாக இருப்பதில் என்ன வியப்பு? என்னைத் தவிர வேறு யாரிடம் அவன் அதைப்பாடி காண்பிக்கப் போகிறான்? அவன் இயற்றிய முதற் கீதத்தைப் பாடுகிறேன் கவனமாகக்கேளு. இன்னொன்றையும் முதலிலேயே சொல்லி விடுகிறேன். உனக்கு ஏற்படுகிற சந்தேக சம்சயங்களை இப்போது என்னிடம் கேட்காதே. கதை முடியுமட்டும் இடையே பேச்செடுத்தால், என் உணர்ச்சிவேகம் குன்றிப் போகும். உணர்ச்சி அற்றது சப் பென்றிருக்கும் என்பது உனக்குத் தெரியாதா? பாவமற்ற நாட்டியத்திலே, பரவசத்துக்கு இடமேது? சிந்தனையைத் தூண் டாத சித்திரத்தை நீ போற்றுவாயோ? ...என்ன? சரி, சரி, அந்தக் கவிஞனின் கீதத்தை இதோ பாடுகிறேன்.

தங்கத் திருமார்பைத் தாங்காமேன் இடையாள்
மங்கைப்பருவத்து எழில்பூத்த வண்ணப்பூ
கண்கள் கருநீலம், கண்ணாடிக் கன்னங்கள்
கூந்தல்அலைஓடும், குங்குமப்பூச் செவ்விதழாள்
ஓவியத்திற்காணு ஒய்யாரி மாதவிநேன்
காவியத்துக் கட்டழகி கனவின் ஒயிலோடு
இதயத்தில் ஒருகோடி எண்ணங்கள் இவ்வளவும்
அமைந்தஒர் ஆரணங்கு அழகேவடிவாக
பூத்திட்டாள் புளகத்தால் பூக்துமே என்வாழ்வு!

இதைக் கேட்டதும், முதலில் எனக்குச் சிரிக்கத்தான் தோன்றியது. உலகத்திலே மூன்று சிருஷ்டிகளைச் செய்த தனல்தான் பரமனிடம் எனக்கு மதிப்பு அதிகரித்தது. ஒன்று குழந்தை, இரண்டாவது பைத்தியம் மூன்ருவது கவி! கவிஞர்களுக்குக் கற்பனை அதிகரிக்க அதிகரிக்க குழந்தை உள்ளம் வந்தடைந்து விடுகிறது. குழந்தை உள்ளம் அளவுக்கு மீறிப் போகும் போது, "பைத்தியம்" என்று போற்றப் படுவதிலே ஆச்சரியம் என்ன? அப்பேர்ப் பட்ட பைத்தியம் பக்கத்தில் இருக்கும் போது, நான் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா?

என் சிரிப்பு, வாசலன் மகிழ்ச்சியை எல்லைமீறி வளர்த்து விட்டது. அதன் விளைவை அதிகமாக விவரிக்க வேண்டிய அவசியமும் இல்லை. பரிமளம், வாசலனைக் கணவனுக அடைந்து விட்டாள்! அவளிடம் கவிக்கு உண்டான பாசம், கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து இமயம் போன்று ஓங்கிய நிலையை அடைந்து விட்டது. நேசனின் உருவம் அவள் உள்ளத்தைப் பூரணமாகக் கொள்ளை கொண்டு விட்டது.

மான்விழியும், தேன்மொழியும்.

கவி இந்த உலகத்தை மறந்தான். மனிதக் கூட்டங்களிலே தானும் ஒருவன் என்ற நினைவு, என்றைக்கு அவன் மனசை விட்டு நீங்கியதோ அன்றே, பரிமளத்துடன் வாசலன், காடு, மலை களைத்தன் இல்லமாகக் கொண்டான். இந்த மாதிரி நிலவு பொழியும் இரவுகளாகவே, முன்னூற்று அறுபத்து ஐந்து நாளும் இருந்து விட்டால் என்ன என்று அடிக்கடி தன் உள்ளத்தரசியைக் கேட்க ஆரம்பித்தான். பரிமளம் நேரடியாகப் பதில் சொன்னால் தானே? அலை பொங்கும் நீர் நிலைகளிலே குளித்துக் கொண்டிருப்பாள். அப்போதுதான்,வான வெளியை நோக்கிக்கொண்டு இந்த அமுத மொழிகளைக் கொஞ்சுவான். அவள், 'உலகம்' பூராவும் இந்தமாதிரி நீர் நிலைகளாக மாறி விட்டால் என்ன, என்று கேட்டாள். இவர்கள் மாறி மாறி இப்படியே கேட்டுக் கொண்டிருப்பது, எனக்குத் தெரியாதா? அதாவது என்னால் அதை ஊகித்து உணர முடியாதா என்ன? நான் என்ன கேட்பேன் தெரியுமா? "ஐயோ பாவம், இந்த அப்பாவிப் பெண் உலகம் தெரியாமல் இப்படி இன்பக் கனவிலே மூழ்கி இருக்கிறாளே விதியின் விளையாட்டு இவர்கள் பக்கம் ஒருமுறை திரும்பிவிட்டால் என்ன நேரும் என்பதைச் சொல்ல வேண்டுமா? கால தேவன் பொறுக்கும் சக்தி படைத்தவன் அச்சே. அவன் வெகுண்டு விட்டால் என்ன நடக்குமோ என்றெல்லாம் எண்ணி யெண்ணி, இதயம் புழுங்கிக் கொண்டிருந்தேன். நான் நினைத்ததுவும் நிகழ்ந்து விட்டது. சூறைக் காற்றுப்போல், ஒரு நாள் அவர்கள் வாழ்க்கையிலே மோதிய கடும் புயலைக் கேளப்பா•கேளு.

அது வசந்த காலம். காதலர் உள்ளங்களிலே காதல்த் தீ மூட்டுவதற்காக, தென்றலும் மன்மதனும் போட்டி போட்டுக் கொண்டுஇயற்கைப் பொருள்களிலே புகுந்து விதவிதவிர்தைகளைச்

செய்து கொண்டிருந்தார்கள். நமது வாசலன் அநேகம் அருமையான சுவை மிக்க கவிதைகளைப் புனைந்து, காதலியின் பாதார விந்தங்களிலே கொட்டிக் கொண்டிருந்தான். அழகுத் தேவியே அங்கு மிங்கும் உல்லாசமாக நடமாடுவதைப்போல் அந்த அழகி ஓடி யாடி மலர் பறித்துக் குழல் முடித்துக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அமர நினைவாக அவர்கள் வாழ்க்கையிலே கழிந்தது. கவிஞன் தன் கற்பனையைச் செலுத்தி சிருஷ்டித்திருந்த சித்திரச் சாலைக்குத் தன் காதலியை அழைத்துச் சென்றான். அந்தச் சித்திரங்களைப் பற்றி உனக்குக் கொஞ்சம் சொல்ல வேண்டும் என்று எனக்கு இப்பொழுது ஆசையாக இருக்கிறது. ஆகா! கலைஞன் கனவுகள் ஓவியன் தூலிகையிலே உருப்பெற்றதென்று சுருக்கமாகச் சொன்னால் மட்டும் போதும். பரிமளம் அவைகளைப் பார்க்கப் பார்க்க, தன்னை மறந்து பரவசத்தில் ஆழ்ந்து விட்டாள். அந்தச் சித்திரங்கள் யாவும் அவளுடைய வாழ்வையே சித்திரிக்கும் வண்ணம் அமைந்திருந்ததால் அவளால் வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்ல முடியவில்லை. கண்ணை மட்டும் அடிக்கடி மூடிக்கொண்டாள். அவள் கண்ணை மூடும்போதெல்லாம் கவிக்குப் பெண் மானின் நினைவே ஞாபகச் சுடரில் மின்ன ஆரம்பித்தது. மான் விழியாளின் ஒரு தேன் மொழிக்காகக் கவியுள்ளம் துடி தடிக்க ஆரம்பித்தது. தேன் இதழைத் திறந்து தேன்மொழி ஒன்று உரைக்க மாட்டாளா என்று அந்தத் தேனிதழாளை அடிக்கடி கவி நண்ணுர்ந்து பார்த்தான்.

விதியின் சதி

அன்று இரவு பூராவும் பரிமளத்தின் நெஞ்சம் பல சுந்திரக் கனவுகளைக் கண்டு கொண்டே இருந்தது. தன்னுடைய பழைய வாழ்வை நினைத்துப் பார்த்தால் அவளுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. ஆகா! உலகத்தின் விசித்திரப் போக்கை என்ன வென்று சொல்வது? எல்லோருடைய வாழ்வும் தன் வாழ்வைப் போல மலர்ந்து விட்டால், இங்கு நிலவிடும் ஆனந்தத்தை வர்ணிக்க ஆயிரம் கவிகள் வேண்டுமே? தனக்குப்போல் உலகில் எல்லோருக்கும் கவிக் கணவர்களாகவே வந்து அமைந்து விட்டால், உலகம் ஓர் அற்புத பூமியாக மாறிவிடும் அல்லவா?

இப்படி எவ்வளவு நேரம் இன்பச் சுழலில் ஈடுபட்டிருந்தாளோ தெரியாது. நான் விழித்தபோது அவளுடைய உடம்பு 'கனகன' த்துக் கொண்டிருந்தது. கவி பிரமை தட்டியவன்போல் அவள் பக்கத்தில் மலர விழித்துக் கொண்டிருந்தான். கவியின் பார்வையி லிருந்தே, தனக்கு ஏதோ உடம்புக்கு வந்து விட்டது என்பதைப் பரிமளம் பரிபூரணமாக உணர்ந்து கொண்டாள். தன் துயர் தேங்கிய முகத்தை மெல்லத் தூக்க முயன்றாள். அடடா! கவியின் நெஞ்சம் உடைந்துவிடும்போல் இருக்கிறதே! நேற்றைய உல்லாசக் கனவு எங்கே? இன்றைய சோகம் தேங்கிய விடியாப் பொழுதெங்கே?

சூரியன் மரக்கிளைகளை மெதுவாகத்தொட முயன்றான். சின்னஞ்சிறு ஒளி வெள்ளம்கூடப் புக முடியாத குடிசை அன்று ஏனோ சிறு வழிவிட்டது ஒளிக்கு. அந்த ஒளி கவிஞனுக்கு, ஒரு கீதம் இசைக்க புதுக்கற்பனை ஒன்றைத் தந்தது. அப்போது அதைச் சித்திரித்துவிட முயன்றான். தன் வாழ்வைத்தான் ஏதோ ஆரம்பித்திருக்கிறானென்கும். என்று அந்தத் தாங்கமுடியாக் காய்ச்சலிலும் பரிமளம் பூரித்தாள். ஆனால், கவி உடனே பாடக்

கேட்டதும் காய்ச்சல் வெறியிலும் முணு முணுத்துக் கொண்டாள் தனக்குள்ளே. ஏதோ ஒரு அருமையான காரியத்தைச் சாதிப் பதற்காகவே தான் இங்கு வந்தடைந் திருப்பதாக எண்ணியிருந்த பரிமளத்தின் மனக்கோட்டை நூறு ஆயிரம் சுக்கலாக உடைந்து தூளாகத் தொடங்கியது. கவி ஒன்றையும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

வெளியே வந்தான்; கார்காலமானதால், கவியின் உள்ளம் எதையோ நோக்கி ஒரு கீதம் இசைக்கத் துடித்தது. வசந்த கால நிலா இரவிலே தன் காதலியுடன் ஓடைக் கரையில் தாமரை மலரைக் கையில் வைத்துக்கொண்டு, வானையும் மலரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே, "இதோ பார், எங்கெங் கெல்லாம் ஒயில் சிந்திக் கிடக்கிறதோ, அங்கெல்லாம் என்னுள்ளம் தாவிக் குதித்ததை நீ அறிவாய். ஆனால், அந்த ஒயில்களனைத்தும் பூத்த ஒரு புதுப் பூவை இன்று காண்கிறேன்!" என்றான்.

நாணத்தால் பரிமளம் தலைகுனிந்தாள். இன்று பரிமளத்துக்கு அது ஞாபகத்துக்கு வரவேண்டுமா? அவள் உள்ளே தலைகவிழ்ந்து படுத்திருக்கையில், கவி வெளியே தலை குனிந்து எங்கோ போய்க் கொண்டிருந்தான் எங்கு போகிறான், ஐயோ, அவள் என்ன ஆவாள்? அவள் எழில் அங்கங்களிலே துடிப்புத்தோன்றுகிறதே! என்ன என்ன? காலனின் இரக்கமற்ற கரங்கள் அவளைத் தீண்ட ஆரம்பித்து விட்டதா? இல்லை இல்லை அவள் சாகவில்லை. என் சாவாள்? சாகாவரம் பெற்ற அநேக அற்புத சிருஷ்டிகளை அவள் படைக்கவேண்டும் என்று இருக்கும்போது படைத்தவன் அதை அழிக்கத்தான் முடியுமா? கவியின் வாழ்க்கைப் பாதையை விட்டு விட்டு, கொஞ்சம் பரிமளத்தையும் அப்படியே "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்" என்ற ரீதியில் விட்டு விட்டு, அந்தப் பிரம்மாண்டமான கலையைக் கவனிப்போம்.

அந்த மலையின் விசேஷத்தை எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் நமக்கு வேண்டியது, சிற்பங்களுக்கு ஏற்ற அருமையான மலை அது என்பதேதான். பெரும் பெரும் பாறை கள், மலைபோன்ற பாறைகள் எல்லாம் அந்த மலையில் இயற்கை யாகவே அமைந்திருந்தன. பல தேசத்து விற்பன்னர்கள் தங்கள் திறமையைச் சோதிக்கும், நிலைக்களமாக அதைக் கருதிப் பணி புரிந்து வந்தனர்.

விட்டகுறை

பரிமளம், கொஞ்ச நாளில் இயற்கையோடு பரிமளிக்க ஆரம்பித்தாள். அவள் கலையுள்ளம் அவளைத் தகிக்க ஆரம்பித்தது. பனிபோன்ற படலங்கள் அவள் மனசை அரித்துப் போர்த்த ஆரம்பித்தது. தான் முன்பு என்ன செய்து கொண்டிருந்தாள்? எப்படிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தாள்? மற்ற இளம் பெண்கள் தோட்டந் துறவுகளிலே அவளுடன் எப்படி சிட்டுக் குருவிகள்போல் சிங்காரமாயிருந்தார்கள்? இதோ, எதிரே இருக்கும் மலையிலிருந்து கல்லைச் செதுக்கிச் செப்பனிடும் உளிகளின் சத்தம் ஆகாயத்தை எட்டுகிறதே. தூள் தூளாக வான மண்டலத்தை நோக்கிச் சிதறும் கற்பொடிகள் கண்ணில் படாமல் தினம் அங்கு வேலை செய்யும் இளம் பெண்கள் மான்விழி போன்ற தங்கள் கண்களை மூடிக் கொள்கிறார்கள் அல்லவா? ஆம், பரிமளமும் தன் கண்களை மூடிக் கொண்டாள். ஆனால் உள்ளத்தை எப்படி மூட முடியும்? பெரு நெருப்பு ஒன்று இதயத்திலே புகைந்து கொண்டிருக்கிறதே, அந்த நெருப்பின் ஜ்வாலையை அவள் எவ்வாறு தாங்குவாள்?

தன்னோடு ஓடியாடி வேலை செய்து வந்த ஒருத்தியை அன்று காலையில் கண்டாள். எப்போதும் போல் சிரித்துக் கொண்டே அந்தப் பெண் தோட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்தாள். பரிமளமும் ஒருகாலத்தில் அவ்விதம் சிரித்தபடியே வாழ்ந்து வந்தவள் தான். அன்று அவளுக்கு அழகைப் பற்றியும், ஆனந்தத்தின் பல கோலங்களைப் பற்றியும் ஒன்றுமே தெரியாது. ஆனால் அழகும், ஆனந்தமும் தன்னிடம் இருந்தது என்பதை மட்டும் இன்று உணர்ந்தாள். ஆகா! இந்தக் கலியோடு கழித்த இன்ப நாட்கள், பின்னர் துன்ப நாட்களையும் அடக்கி வைத்திருந்தது என்பதை அவள் எப்படி அறிவாள். இப்போதைப்போல் இருந்தால்

பரிமளம் சந்தேகத்திற்கு இடமின்றிச் சொல்லியிருப்பாள். என்ன தெரியுமா? "அம்மா தாயே! படைப்புத்தேவியே! கலை ஆராய்ச்சியைவிட, தோட்டத்து வரப்பின் மேல் உட்கார்ந்து கொண்டு மாடுகள் மேய்வதை ஆராய்வது எவ்வளவோ சிறந்ததம்மா. கவியோடு வாழ்வதைவிட, மண்ணாங் கட்டிகளுடன் விளையாடிக் கொண்டிருப்பது ரொம்ப நல்லது. மலையையும், வானத்தையும் வர்ணித்துக் கொண்டு பொய்க் கனவில் ஆழ்வதைவிட, ஆடு, மாடுகளைப் பற்றிப் பேசினாலும் பயனுண்டு. கவிக்கு அறுசுவை உண்டி சமைத்துப் போடுவதைவிட ஆட்டுக்குட்டிக்குப் புல் பிடுங்கிப் போடுவது எவ்வளவோ அருமையான காரியம்".

இன்னும் என்னென்னவோ நினைத்தாள். இந்தப் பாழாய்ப் போன, நிலவும், நிழலும், குன்றும், ஆறும் அன்றைக்குக் கண்ணில் பட்டாலும் மனத்திலே நின்று உறுத்தவில்லையே! இன்று தன் இன்ப வாதனையே பெரு வெள்ளம் போல் பொங்கி விடச் செய்கிறது. பரிமளத்தின் மனம் கொஞ்ச நாளாக கற்கள் ஆராய்ச்சியிலே ஈடுபட்டது. அவள் மனத் துடிப்பு, சிற்ப வடிப்பிலே வந்து நின்றது கடைசியில். புயல் போல் பீறிட்டு எழுந்த உணர்ச்சிகளைக் கல்லிலே வடிக்க ஆரம்பித்தாள். கடைசியாகத் தன் வாழ்வையே அற்புதமான சிற்பங்களில் செதுக்க ஆரம்பித்தாள். இளவேனிலின் பூரிப்புடன் மலர்ந்த பால்யப்பருவம், புது மலரின் வனப்புடன் செழித்த எழிற் பருவம், இளந் தளிரின் பசுமையும் வனப்பும் நிறைந்த கன்னிப் பருவம், இப்பவும் படிப்படியாக நீண்டு பின்னர் ஏக்கந் தேங்கிய தன் தற்கால வாழ்வு; கவிஞனுடன் இனிய கனவு போன்ற சுந்திர நாட்கள்; அந்த அமர நாட்களிலே மெய்ம் மறந்து நின்ற அற்புதத் தோற்றங்கள்; எல்லாம் ஒவ்வொரு நாளும் ஒயிலான சிற்பங்களிலே நிலை நாட்டிக் கொண்டிருந்தாள் பரிமளம். தன்னையே மறந்து விட்டாள். என்ன நடக்கிறது, எப்படி உலகம் போய்க் கொண்டிருக்கிறது என்பதொன்றும் அவளுக்குத் தெரியாது. தன்னுடைய மனக் குகை ஓவியங்கள் பூரணமாய் முற்றுப் பெற வேண்டும் என்பதே அவளுடைய இதயத் துடிப்பு.

ஞானோதயம்

ஒரு மாலை வேளை. மாலைக்கதிர்கள் தேஜோமயமாக மலையின் முகட்டில் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. சிற்பியர்கள் வேலைகளை முடித்துக் கொண்டு அடிவாரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். பரிமளம், தான் அன்று முடிக்கக் கருதிய ஒரு சிலையின் இடையை செப்பனிட்டுக் கொண்டிருந்தாள். இடை ஏனோ சரியாக அமைய வில்லை. கொடிபோன்ற இடையை அமைப்பதாக இருந்தால் ஒரு நிமிஷத்தில் பூர்த்தி பண்ணி விடுவாள். ஆனால், தன் இடையைப் போல் அது அழகாக இருக்கவேண்டுமே? எப்படித் திருத்தினாலும் தன் உள்ளத்தைத் திருத்த முடிய வில்லையே? தன் மனத்தைத் திருத்த முடியா விட்டால் அந்தச் சிற்பத்திலே என்ன கலை அழகு இருக்கப் போகிறது? ஆனால் "கலை அழகு" என்றவுடன் அந்தப் பொல்லாத கவிஞனின் ஞாபகம் வந்தது. "பாவி" என்றாள் தன்னை மறந்து.

அப்போது காலடி ஓசையும், அதைத் தொடர்ந்து 'பாவியார்?' என்ற இனிய சொல்லும் அங்கு எழுந்தது.

பரிமளம் சாந்தமாகத் திரும்பிப் பார்த்தாள். தன் எதிரே நிற்பவர் யாரென்பதைக் கண்டு கொண்டாள். வந்தவர் யரென் பதைச் சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய பழைய கவிஞரே தான். ஆனால், அவர் இப்போது புதிதாக மாறி விட்டாரா என்றால் கிடையாது. அதே பார்வை, அதே வர்ணனைகள், அதே தான் எல்லாம். ஆனால், கொஞ்சம் இந்தப் பத்து வருஷத்தில் உருவத்தில் சற்று மாறியிருந்தார். பரிமளமும் எவ்வளவோ மாறிப் போயிருந்தாள். ஆகையால்தான் கவிக்கு அடையாளம் தெரிய வில்லை. இளமலர் போன்று இருந்த தேகத்தின் முன்னைய காந்திக்கும் இப்போதைய மயங்கிய தோற்றத்திற்கும் எவ்வளவோ

வித்தியாசம். உள்ளத்திலும் அப்படியேதான். ஆனாலும் அந்தப் பண்பு இருக்கிறதே, அதற்கு எவ்வளவு காலம் வேண்டும்? சும்மா மனப் பண்பைப் பெற்றுவிட முடியுமா, என்ன?

பரிமளம் சிற்பத்திலே சிறந்த கலாவதி யாகிவிடுவாள் என்று கவி கனாக் காண முடியுமா? ஏதோ ஒரு ஞாபகமாய்ப் பழைய கிராமத்துக்கு வந்தான். மாலையின் மயக்கத்தில் மலையின் உச்சியை அடைந்தான். அற்புதமான சிற்ப வேலைப் பாடுகளைக் கண்டதும், பக்கத்திலே ஒரு அழகியையும் பார்த்ததில் அவனுக்குப் பரம திருப்திதான். ஆனாலும் மறுகணமே தன் பெயர் பரிமளம் என்று அவள் சொல்லி முன் கதைச் சுருக்கத்தை விளக்கவும், கவி திடுக்கிட்டு விட்டான். தன் போலிச் சமாதானங்கள், பனிப் படலம் போல் மறைவதைக் கண்டான். பரிமளத்தின் சுகந்த மணம் அப்போது இன்னும் அதிகமாக பரிமளிக்கத் தொடங்கியது கவியின் மனசில். தயங்கித் தடுமாறி, சிற்பங்களைப் புகழ ஆரம்பித்தான்.

பரிமளம் உக்கிரமாகப் பேச ஆரம்பித்தாள். "கவிஞரே! நேராகப் பாரும், நிமிர்ந்து என் முகத்தைப் பாரும். உம்முடைய அழகுப் பிரசங்கம் இப்போது யாருக்கு வேண்டும். இன்றைக்கும் சொல்லுகிறேன் கேளுங்கள். அழகுதானே உங்களுக்கு வேண்டும். ஆம், அழகேதான். எந்த அழகு தெரியுமா? என்னிடம் முதல் முதலில் கண்ட அமுத அழகை-நான் இருந்தாலும், இறந்தாலும்-காண வேண்டும். இந்த மாதிரி அபத்தக் கற்பனையல்ல. சுந்திரக் கற்பனை, அதாவது இனிய கனவு காண வேண்டும். அப்படி ஒயில்க் கனவு காண ஆரம்பித்தால் இந்த அப்பாவிச் சனங்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் புரிய ஆரம்பிக்கும். கவிஞரே! அந்த மாதிரி கனவு காணுங்கள். அதுதான் உண்மைக் கவிக்கு வேண்டியது". ஒரு இனிய கனவு காண்பது போன்று கவி நின்று கொண்டிருந்தான். பரிமளம், தன் சிற்பத்தில் கருத்தைச் செலுத்த ஆரம்பித்தாள்.

Express Bobbin Works

QUILON

Manufacturers of

All Sorts of Bobbins
Wooden Accessories etc.,
for Mills

Local Enquiries to:

K. APPU

4/42 Trichy Road,
COIMBATORE.

Remember

THE BIG THREE!

Distinctive Designs in Gold

K. B. R.

JEWELLERY

SILVER WARES OF EVERY DESCRIPTION

PROMPTLY EXECUTED

A VISIT TO OUR SHOW ROOM
SURELY WILL CONVINCE YOU

K. B. R. ஜுவல்லரி

பெரியகடைவீதி : கோயமுத்தூர்.